பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
26 04 2025 **SATURDAY** 7 15 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசு பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக வழங்கி உரையாற்றுகிறார்.
2. அமர்நாத் புனித யாத்திரை இந்த ஆண்டு திட்டமிட்டபடி நடைபெறும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
3. வடகிழக்கு மாநிலங்களின் மின்சாரத்துறை அமைச்சர்கள் மாநாடு, இன்று சிக்கிம் மாநில தலைநகர் கேங்டாக்கில் நடைபெறவுள்ளது.
4. பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் பாகிஸ்தான் துணை ராணுவப்படையைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டனர்.
5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி, ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

>>>>>><<<<<<

மத்திய அரசு பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக வழங்கி உரையாற்றுகிறார்

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, வேலைவாய்ப்புக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது.

நாடுமுழுவதும் 47 இடங்களில் இன்று வேலைவாய்ப்பு முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வளர்ச்சிக்கு இளைஞர்கள் திறம்பட பங்களிப்பதற்கும், அவர்கள் அதிகாரம் பெறுவதற்கும் வேலைவாய்ப்புகள் பயன்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று பணிநியமன கடிதங்களை பெறவுள்ள இளைஞர்கள் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் பணியமர்த்தப்படுவார்கள்.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை அடுத்து, தீவிரவாதத்திற்கு எதிராக மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தெலுகு தேசம் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை, தெலுகு தேசம் கட்சியின் தலைவரும், ஆந்திரப்பிரதேச முதலமைச்சருமான திரு. சந்திரபாபு நாயுடு சந்தித்து பேசினார்.

பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் கடுமையாக கண்டிக்கத்தக்கது என்று கூறிய அவர், அதுவொரு கோழைத்தனமான செயல் என்று கூறினார்.

நாட்டின் நலனுக்காக மத்திய அரசு மேற்கொள்ளும் அனைத்து முடிவுகளுக்கும் தமது கட்சியும், நாட்டு மக்களும் உறுதுணையாக இருப்பார்கள் என்றும் பிரதமரிடம் அவர் உறுதியளித்தார்.

இதுபோன்ற கடினமாக காலங்களில் நாட்டை வழிநடத்த பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வலுவான மற்றும் உறுதியான தலைமை மீது தமக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த சந்திப்பின்போது போலாவரம் பாசன திட்டத்திற்கு மத்திய அரசு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு திரு. சந்திரபாபு நாயுடு, பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

ஆந்திராவில் **BPCL** எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் **Petro** ரசாயன வளாகத்தை விரைவில் அமைப்பதற்கான பணிகளை இறுதி செய்வது தொடர்பாகவும், பிரதமரோடு திரு. சந்திரபாபு நாயுடு ஆலோசனை நடத்தினார்.

>>>>>><<<<<<

சிந்து நதியிலிருந்து ஒரு சொட்டு தண்ணீர் கூட பாகிஸ்தானை சென்றடையாமல் இருப்பதை மத்திய அரசு உறுதி செய்யும் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

1960ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் செய்து கொள்ளப்பட்ட சிந்துநதி நீர் ஒப்பந்தம் தொடர்பான உயர்மட்டக் கூட்டம் புதுதில்லியில் நேற்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல், பஹல்காம் தாக்குதல் சம்பவத்திற்குப் பின்னர் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா நிறுத்தி வைத்துள்ளதாக கூறினார்.

அரசு எடுத்துள்ள இந்த முடிவு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு என்றும் முற்றிலும் நியாயமான முடிவு என்றும் தேசிய நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

அமர்நாத் புனித யாத்திரை இந்த ஆண்டு திட்டமிட்டபடி நடைபெறும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலால் புனித யாத்திரை தடைபடாது என்றும், திட்டமிட்டபடி ஜூலை மாதம் 3ஆம் தேதி யாத்திரை தொடங்கும் என்றும் கூறினார்.

இந்த ஆண்டு அமர்நாத் புனித யாத்திரையில் பங்கேற்பதற்காக ஏராளமானோர் முன்பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாத தாக்குதலால் ஜம்மு காஷ்மீரின் சுற்றுலாத் துறை பின்னடைவை தற்போது சந்தித்திருந்தாலும், மிக விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜம்மு காஷ்மீரில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும், மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தப்படும் என்றும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>>><<<<<<

வடகிழக்கு மாநிலங்களின் மின்சாரத்துறை அமைச்சர்கள் மாநாடு, இன்று சிக்கிம் மாநில தலைநகர் கேங்டாக்கில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் பங்கேற்கிறார்.

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, நாகாலாந்து உள்ளிட்ட மாநிலங்களின் மின்துறை அமைச்சர்களும், உயரதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடகிழக்கு பகுதிகளில் மின்விநியோகம் மற்றும் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று மாலை கேங்டாக்கில் நடைபெறவுள்ள மற்றொரு நிகழ்ச்சியில் அம்மாநிலத்தில் நகர்ப்புறத்தில் நடைபெற்று வரும் மின்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து, முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங் முன்னிலையில் நடைபெறவுள்ள கூட்டத்திலும், மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கு இன்று ரோமில் நடைபெறவுள்ளது.

செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் வைக்கப்பட்டுள்ள போப் பிரான்சிஸ் உடலுக்கு இந்தியாவின் சார்பில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு நேற்று மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார்.

வாடிகன் நகரில் இன்று நடைபெறவுள்ள இறுதிச்சடங்கிலும் அவர் பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<

உலக அறிவுசார் சொத்துரிமை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

அறிவுசார் சொத்துரிமையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இந்நாளை உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு கொண்டாடி வருகிறது.

இதையொட்டி, நாடுமுழுவதும் காப்புரிமை தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 3 இசைக்ருவிகள் உட்பட நாடுமுழுவதும் 19 இசைக்கருவிகளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மாநில புவிசார் குறியீட்டு பதிவுக்கான முதன்மை அதிகாரி திரு. சஞ்சய் காந்தி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சஞ்சய் 44 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான – **DRDO Stramjet** எஞ்சின் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.

ஹைதராபாதில் உள்ள **DRDO** ஆய்வகத்தில் இந்த எஞ்சின் ஆயிரம் வினாடிகள் இயக்கப்பட்டு, பரிசோதித்து பார்க்கப்பட்டது.

விரைவில் இந்த எஞ்சின் விமானத்தில் பொருத்தப்பட்டு, முழுஅளவிலான பரிசோதனை நடத்தப்படும் என்று **DRDO** அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறையின் இந்த சாதனைக்காக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஒளியை விட ஐந்து மடங்கு வேகத்தில் செல்லக்கூடியஹைப்பர்சோனிக் ஆயுத தொழில்நுட்ப தயாரிப்புக்கு இத்தகைய சோதனை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தொலையுணர்வு கட்டுப்பாட்டு சாதனம் மூலமாக நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் பாகிஸ்தான் துணை ராணுவப்படையைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு பலுசிஸ்தான் விடுதலை ராணுவம் என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

பலுசிஸ்தானில், பாகிஸ்தான் ராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிரான நடவடிக்கைகள் இனி தீவிரப்படுத்தப்படும் என்று அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

கடந்த வாரம் இதே பகுதியில் சாலையோரம் ஒன்றில் குண்டு வெடித்ததில் வாகனத்தில் சென்று கொண்டிருந்த 3 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி, ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய சென்னை அணி 19 புள்ளி ஐந்து ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 154 ரன் எடுத்தது.

155 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய ஹைதராபாத் அணி 18 புள்ளி 4 ஓவரில் 5 விக்கெட்டை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

இன்று கொல்கத்தாவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி — கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>><<<<<<**

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெறும் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் மனுஷ் ஷா — தியா சிட்டாலே இணை, துனிஷியாவின் வாசிம் - எகிப்தின் ஹனாகோடா இணையை எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் இந்தியாவின் யசஸ்வினி - தியா சிட்டாலே இணை, சீனாவின் **Huyi - Ding Yijee** இணையை எதிர்கொள்கிறது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் மானவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை, துனிஷியாவின் வாசிம் - நெதர்லாந்தின் **Remi Chambet** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>>>END<<<<<<**